ஆற்றங்கரையிருக்கும் ஆறுமுகன்
அஞ்சேலென்றே அவையம் கூறும் முகன் *2*
பாட்டில் மகிழ்ந்து தலை ஆட்டும் முகன்
கொடும் பாவியர் முன் விரம் காட்டும் முகன் *2*
சன்னிதியான் செல்வச் சன்னிதியான்
தருமத்தின் வெரற சம்மதியான் *2*
சம்மதியான் எங்கள் சன்னிதியான்
சத்தியம் மயிலேறி வந்தெழுவான் *2*

ஆற்றங்கரையிருக்கும் ஆறுமுகன்
அஞ்சேலென்றே அவையம் கூறும் முகன

தொண்டைமனாறு உந்தன் விடல்லவோ
அந்த சோலையில் எங்களின் கூடல்லவோ
கண்டவர் கைதொழும் ஆறல்லவோ
அதில் கால் தொழில் புண்ணிய பேறல்லவோ
சன்னிதியான் செல்வச் சன்னிதியான்
தருமத்தின் வெரற சம்மதியான்
சம்மதியான் எங்கள் சன்னிதியான்
சத்தியம் மயிலேறி வந்தெழுவான்

ஆற்றங்கரையிருக்கும் ஆறுமுகன்
அஞ்சேலென்றே அவையம் கூறும் முகன

நீவரும் தேர் கூட தீயாச்சுதே
எந்த நேரமும் நிலத்தினில் போராச்சுதே *2*
தாயவள் மேனியும் புண்ணாச்சுதே
தமிழ் சந்ததி உதிர்கின்ற மண்ணாச்சுதே *2*
சன்னிதியான் செல்வச் சன்னிதியான்
தருமத்தின் வெரற சம்மதியான் *2*
சம்மதியான் எங்கள் சன்னிதியான்
சத்தியம் மயிலேறி வந்தெழுவான

ஆற்றங்கரையிருக்கும் ஆறுமுகன்
அஞ்சேலென்றே அவையம் கூறும் முகன

பச்சைமா மயில் ஏறி வேலெடுப்பாய்
வந்த பகை அதிர போய் விள கால்பதிப்பாய் *2*
அச்சமிலாதொரு வாழ்வழிப்பாய்
நாமும் அங்குபோய் வாழ்கின்ற நாளளிப்பாய் *2*
சன்னிதியான் செல்வச் சன்னிதியான்
தருமத்தின் வெரற சம்மதியான் *2*
சம்மதியான் எங்கள் சன்னிதியான்
சத்தியம் மயிலேறி வந்தெழுவான

ஆற்றங்கரையிருக்கும் ஆறுமுகன்
அஞ்சேலென்றே அவையம் கூறும் முகன